PAVITHRAN ACADEMY - இரண்டாம் பருவத் தேர்வு - 2023

வகுப்பு : 12 மதிப்பெண்கள் : 90

TOPPERS QUESTION

இயல் - 6, 7, 8 உள்ளடக்கிய வினாத்தாள் - 2023

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

1 ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல்... தொடர்களில் வெளிப்படும் செய்திகள்

1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.

2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி

இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

2. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர் ________

அ) தண்டி ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

3. திண்ணியர் என்பதன் பொருள் ________

அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர்

இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

4. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர் ________

அ) அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) பிரமிள்

5. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்'-விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும் ________

அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்

ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்

ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார

www.Padasalai.Net

6. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர் ______

அ) தனக்குப் பயன்படும் , பிறருக்குப் பயன்படாது

ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது

இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது

ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

7. ச. த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் ________

அ) பௌத்தமும் தமிழும். ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும். ஈ) கிறித்தவமும் தமிழும்

8. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி ________

அ) உதகமண்டலம். ஆ) விழுப்புரம். இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

9. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது? ________

அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

10. 'நிறை' மாத இதழின் ஆசிரியராக இருப்பவர் ________

அ) சுகந்தி சுப்பிரமணியன் ஆ) இரா. மீனாட்சி இ) அகலிகை ஈ) சாந்தா தத்

11. தமிழுக்குத் தலை கொடுத்த வள்ளல் ________

அ) அதியமான் ஆ) பேகன் இ) குமணன் ஈ) நல்லியக்கோடன்

12. புறநானூற்றை உ. வே. சா அவர்கள் அச்சில் பதிப்பித்த ஆண்டு ________

அ) 1948 ஆ) 1894 இ) 1874 ஈ) 1927

13. 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் ' என்ற அடிகள் மூலம் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன என்பதை தெரிவிக்கும் நூல் __________

அ) அகநானூறு ஆ) நெடுநல்வாடை இ) பட்டினப்பாலை ஈ) பதிற்றுப்பத்து

14. பெருங்காப்பியத்திற்குரிய நான்குவகை உறுதிப்பொருள்களும் பிற உறுப்புகளும் முழுமையாக அமையப்பெற்று விளங்கும் காப்பியம் _______

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) சீவகசிந்தாமணி ஈ) குண்டலகேசி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி** **3 × 2 = 6**

15. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?
16. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.
17. வறுமையும் சிறுமையும் தருவது எது?
18. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி** **2 × 2 = 4**

19. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
20. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக
21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி** **7 × 2 = 14**

22. தொன்மம் - விளக்கம் தருக.
23. ஏதேனும் **ஒன்றனுக்கு** உறுப்பிலக்கணம் தருக.
    அ) தொழுதனர் ஆ) அறிந்து
24. ஏதேனும் **ஒன்றனுக்கு** புணர்ச்சி விதி தருக.
    அ) ஏழையென ஆ) பெருந்தேர்
25. விடைக்கேற்ற வினா அமைக்க.
    அ) நடுவண்அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது
    ஆ) குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.
26. பத்தியைப் படித்து தேவையான இடங்களில் நிறத்தக்குறிகளை இட்டு

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

எழுதுக.

இளங்கோவடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம்என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

27. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) ஆற அமர ஆ) ஆணி அடித்தாற் போல

28. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.

அ) கபிலன் திறமையானவர் என்று __________ (குமரன்) தெரியும்.

ஆ) உங்களுக்கு __________ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

29. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.

களம், கலம். **அல்லது** ஊண், ஊன்

30. கலைச்சொல் தருக. அ) Animation ஆ) File

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி** 2 × 4 = 8

31. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

32. சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விவரிக்க.

33. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2 × 4 = 8

35. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

36. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

37. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

38. நேர மேலாண்மை பற்றி வெ. இறையன்பு கூறும் கருத்துக்களை கூறுக.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி** 3 × 4 = 12

39. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. ( **அல்லது** )

எடுத்துக்காட்டு உவமையணியை விளக்குக

40. இலக்கிய நயம் பாராட்டுக. ( மையக்கருத்துடன் ஏற்புடைய நயங்கள் மூன்றினை எழுதுக.)

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

பாரதிதாசன்

41. தமிழாக்கம் தருக.

I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life, I develop other good habits, writing, listening to music,

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.

42. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

1. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.

2. முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

3. கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.

4. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்

43. உங்கள் கனவு ஆசிரியர் குறித்துக் கட்டுரை எழுதுக.

**பகுதி - IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3 × 6 = 18**

44. அ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக. ( **அல்லது** )

ஆ) எச். ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க. ( **அல்லது** )

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? - விளக்குக. ( **அல்லது** )

ஆ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.

**பகுதி - V**

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக.** **4 + 2 = 6**

அ) பாதகர் குழுமிச்.... எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

ஆ) ' செயல் ' என முடியும் குறளை எழுதுக.

**சு.விவேக் M.A.,MPHIL.,B.ED., முதுகலைத் தமிழாசிரியர், கரூர் மாவட்டம்.**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net